காஞ்சி

# நாடு



ACL-TNAL
03373



சிறப்பாசிரியர்:
டாக்டர். சி.என்.ஏ. பரிமளம்.

JL
ஈ2112, N92KN
N93.1.13.
217213



# ANNA'S APHORISMS

- ★ As a Politician I am a class by myself.
- ★ Democracy believes in human dignity.
- ★ Divinity is nothing but humanity in perfection.
- ★ Each and every Government Office should serve as a training centre of democracy. Then only democracy will survive,
- ★ I believe in the purity of my heart in order to make others accept my views,
- ★ I rarely speak English but English is not rare to me
- ★ No language can equal one's mothertongue in dignity and status.
- ★ Politics is the art of educating and correcting people through ideas.
- ★ Regional imbalances wiil retard National Integration.
- ★ The habit of drinking spoils not only ways of life but also the principles of life.
- ★ Wisdom is manifested in action.
- ★ The verdict of the people is the verdict of GOD.

நன்றி : தமிழரசு

# காஞ்சி நாடு

மலர்—1 7—9—1993 இதழ்—13

திருவள்ளுவர் ஆண்டு 2024
மடங்கல் (ஆவணி)


மனிதமேம்பாடே என் இயக்கம்
தோழமையே என் மேடை
—அறிஞர் அண்ணா

# இன்றைய தேவை

தந்தைப்பெரியார், அண்ணா இவர்களின் பெயரை மட்டும் சொல்லிக் கொண்டு; அவர்களுடைய கொள்கையிலிருந்து விலகிச் சென்று சுயலாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நாட்டை கொள்ளை லாப வேட்டைக் காடு ஆக்கிய அரசியல் 'வியாதி' களை அடையாளம் கண்டு, ஒதுக்க வேண்டியது - இன்றையத்தேவை.

அந்த நச்சுப் பூண்டுகள்!
ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள்!
ஜனநாயக வேரை அழிக்கும்.
வெந்நீர் ஊற்றுகள்!
ஜனநாயகத் தாமரைத் தடாகத்தை கலக்கிய
பசுத் தோல்போர்த்திய எருமைகள்!

அணுக்கதிர் வீச்சுக்குப் பல ஆண்டுகளுக்கு பிறகும் அதன் கொடிய கோரக் கரங்கள் தன் வெம்மையை, அழிவை, முடிவில்லாமல் தொடர்வதுபோல், இவர்கள் காலத்துக்கு பிறகும், இவர்களுடைய சந்ததிகள் தொடர முயலுகிறார்கள். இன்றைய இளைய சமுதாயத்தை இவர்கள் பிடியிலிருந்து மீட்க வேண்டும்.

'வில்லவன் கோதை விருந்துகள்'
நாட்டில் நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும்.

'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' நாடகத்தில் சிவாஜி கங்கைவாசி, காகப்பட்டரிடம், காலில் விழுந்து வணங்கும் காட்சியில் 'மராட்டியமே மண்டியிடாதே' என்று வசனம் எழுதி அண்ணா தமிழனை தட்டி எழுப்பினார். அவர் வழி வந்தவர்கள், நடப்பவர்கள் என்று சொல்லிக் கொண்டு, மண்டியிடும் மந்த புத்தித் தமிழனை, கண்டிக்க வேண்டும்.

ஐயா அண்ணா காலத்தில் எதிரியை அடையாளம் தெரிந்தது. எதிர்த்தார்கள்! வென்றார்கள்!

**ஆனால் எதிரி இப்போது இந்த முகாமிலேயே!**
**நண்பன் உருவில்! உன் நிழலாக!**
**தமிழனே இனிமேல் விழிப்பாக இரு!!**

ஐயா, அண்ணாவுடன் வாழ்ந்தவர்கள் கொள்கைச் சிங்கங்கள் சமீப காலத்தில் 'பதவிப் பித்தர்களாக' பதவிச் சுகத்துக்காக, கொண்ட கொள்கையை இழக்கத் தயாரானதை, இழந்ததை கண்ட தமிழ்த்தாய் இரத்தகண்ணீர் வடித்தாள். அப்படிப்பட்டவர்ளுக்கே அந்த கதி என்றால் அண்ணா, ஐயா 'படத்தை' மட்டும் பார்த்த இந்த சந்ததியினருக்கு. 'பாடத்தை' அறியாத இந்தச் சந்ததியினருக்கு. என்னென்ன சோதனைகள். எப்படிப்பட்ட சரிவு காத்திருக்கிறது என்பதை நினைத்தால் இன்றைய இளைய சமுதாயம். எவ்வளவுப்பாடம் பெற வேண்டியிருக்கிறது என்பது புரியும். ஐயா. அண்ணா கொள்கையிலே பிடிப்புள்ளவர்களுக்கு, எவ்வளவு பெரிய பணிகாத்திருப்பது புரியும். அந்தப் பணியில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வதுதான் இன்றை" தேவை.

---

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை
துணிவு தெளிவு கனிவு

# செய்திகள்

15. 8. 93 அன்று ஞாயிறு மாலை 5 மணி அளவில், திருச்சி அரியலூர் மாவட்டம் பேரறிஞர் அண்ணா இல கியப் பேரவையின் கலந்துரையாடல் கூட்டம் அரியலூர் T-A-P திருமண மன்றத்தில் திரு. T-A-P பழனி சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அரிய மாவட்ட செயலர் திரு கோதண்டராமன் முன்னிலை ஏற்றார். கவிஞர், முத்தரசன் BA வரவேற்புரையாற்றினார். திருச்சி மாவட்ட பேரவைப் புரவலர்கள் திருமதி. பொற்செல்வி இளமுருகு, திரு. இள



217213

முருகு பொற்செல்வி திருச்சி மாவட்ட பேரவைத் தலைவர் திரு MS, வெங்கடாசலம். அரியலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம், தி, மு. க. நன்றியச் செயலர் திரு. சின்னப்பா BSC. BL திரு அரங்கபாரி திரு அண்ணா தரவுத், மற்றும் அரியலூர் தி. மு. க, தோழர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரைத்தனர்,

முடிவில் திரு டேவிட் நன்றி கூறினார்.

XXX

பேரறிஞர் அண்ணாவின் சீன படைபெடுப்பு பற்றி வானொலி பொழ்வின் நூலை தலைமையகத்திற்கு அனுப்பிவைத்த

திரு. கு. இராமசாமி (இராவத்நூர்-கோவை) அவர்களுக்கு நன்றி

XXX

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை
புரலவர் பட்டியல்

J.L

N92 KN

டாக்டர் இராமமூர்த்தி. மேலூர், ma2.1.12

MV. BACTA- ETOILE- FRANCE

N93.1.12

காஞ்சி நாடு வாழ் நாள் உறுப்பினர் பட்டியல்

திரு, இரத்தின ம்— மதுரை

திரு. அ. கதிர்வேல் — காரைக்குடி

திரு. முத்துசாமி — காரைக்குடி

மதுரை

மதுரை மாவட்ட பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் தொடக்கவிழாவும், காஞ்சிநாடு திங்கள் இதழ் அறிமுகவிழாவும் மதுரை காலேஜ் அவுசில் 16.8.93 அன்று மாலை 5 மணி அளவில் நடைபெற்றன.

மதுரை மாவட்ட பேரவை செயலர் திரு பெரியய்யாவரவேற்புரையாற்றினார் வள்ளுவத் தென்றல் திரு M.மணிமொழியன் தலைமை யேற்றார். மதுரை வழக்கறிஞர்திரு கண்ணன் B.A,L.L.B. அவர்கள் முன்னிலை ஏற்றார்கள். தமிழ்ப்பாவை ஆசிரியர் திரு. கருனைதாசன், தமிழ் மாருதம் ஆசிரியர் டாக்டர் சாம்பசிவனார் ஒய்வு பெற்றசென்னை கன்

னிமாறா பொது நூலக தலமைநூலகர் திரு சுந்தர்ராசன், வழக்குரை ஞர் திரு ஜெயராமன் திண்டுக்கல் அண்ணா மாவட்ட அமைப்பளர் டாக்டர், கா.இளபதி இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு இரத்தினம், பார்வர்டு பிளாக் தாலைவர் திரு அய்யண்ணன் அம்பலம் திரு தோப் பூர் திருவேங்கிடம் எம்.ஜி.ஆர் அ.தி.மூக. துணைப் பொதுச் செயலா ளர் புலவர் அறிவுடை நம்பி ஆகியோர் வாழ்த்துரைத்தனர்

மேலூர் மருத்துவ. இராமமூர்த்தி, மேலூர் கலைக்கல்லூரி பேராசிரியர் இராமசாமி பேராசியர் வேளுர் நாகமாணிக்கம்காரைக்குடி திரு கதிர்வேல், காமராஜர் மாவட்டம் அமைப்பாளர் திரு போஸ் திரு பிரகாஷ், திரு ரவி திரு இராசசேகர் அனல் வீச்சு ஆசிரியர் விவேகாநந் தன், தேசிய காங்ரஸ் திரு.செல்வராஜ். மதுரை பாண்டி மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேலூர் மருத்துவர் இராமமூர்த்தி, 1000 நன்கொடை அளித்து தன்னை பேரவையில் புரவாலராக இணைத்துக் கொண்டார். திரு. இரத்தினம் அவர்கள் காஞ்சிநாடு திங்கள் இதழுக்கு 250 நன்கொடை அளித்தார். விழாவுக்கு வந்திருத்த பலர் காஞ்சிநாடு இதழுக்கு ஆண்டு சந்தாவும் நன்கொடையும் அளித்தனர் மதுரை மாவட்ட பேரவையின் சார்பில் திரு. பெரியய்யா அவர்கள் டாக்டர் பரிமளம் அவர்களுக்கு நினைவுப் பரிசு ஒன்று வழங்கினார். தி மு. க, தி க தோழர்களும், அண்ணா பற்றாளர்களும் பெரும் அளவில் கலந்து கொண்டனர். விழா முடிவில் டாக்டர், CNA-பரிமளம் அவர்கள் பேரவையின் தேவை அது செய்ய இருக்கிற பணி இவை பற்றி விளக்கிப் பேசினார். வழக்குறை ஞர் இராசஇரத்தினம் நன்றி கூறி விழா முடிவுற்றது.

## காஞ்சிபுரம் K. T. S. மணி மறைந்தார்

அறிஞர் அண்ணாவின் உறுதுணையாக இருந்து பணி யாற்றியவர், ஐயா, அண்ணா பற்றாளர் நீண்ட நாள் திராவிட இயக்க, சுயமரியாதைவீரர் காஞ்சீபுரம் திரு K.T.S. மணி அவர்கள் 28—8—93 அன்று இரவு காஞ்சியில் கால மானார். பல இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் இறுதி மரி யாதை செலுத்தினர். டாக்டர் சி,என்,ஏ. பரிமளம் பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் சார்பில் இறுதி மரியாதை செலுத்தினார். திரு. K.T.S. அவர்களின் விருப்பப்படி அவர் உடல், மருத்துவக் கல்லூரிக்கு கொடையாக அளிக்கப்பட்டது.

# இவர்தான் அண்ணா!

## பெரியாரிடம் கற்றது

"யார் கூறினாலும் பொருள் இருக்கிறதா?
பொருத்தமாக இருக்கிறதா?
முன்பின் சொன்னதற்கு முரணாகாமல் இருக்கிறதா?
மூலக் கருத்தினை கெடுத்திடா வகையில் இருக்கிறதா?
என்று பார்க்கச் சொல்லும்
பழக்கத்தை பெரியார் ஏற்படுத்தி
விட்டதாலே!' என்கிறார் ஓர்
கடிதத்தில்.

9 · 10 · 1955
'தம்பிக்கு' திராவிடநாடு

✠ ✠ ✠

## அண்ணாவின் குண நலன்

'பொறுப்புகளை ஏற்கத் தயங்குவது
என் சுபாவம்.
ஆனால் ஏற்றுக் கொண்ட பொறுப்புகளை
என்னால் முடிந்தவரை சுமந்து செல்வது
என் பழக்கம்!

9 — 10 — 49

✠ ✠ ✠

'இன்னா செய்தாரை ஒருத்தல்
அவர் நாண நன்னயம் செய்துவிடல்
என்பது திருக்குறள். நான் கூடுமான
- வரையில் அந்த நன்னெறியில்
செல்ல முயலுகிறேன்!

✠ ✠ ✠

'நிலமை என்னை உண்டாக்கிற்று!
நிந்தனை என்னை வளர்க்கிறது!
நிலமையை நான் உண்டாக்கவில்லை!
நிந்தனை எனக்கு பழக்க மற்ற காரியம்!'

9 — 10 — 49

✠ ✠ ✠

## அண்ணாவின் தன்னடக்கம்

தெளிவு, துணிவு கனிவு என்ற மூன்று பண்புகளையும் தம்பியர் பெறவேண்டும் என்று சொல்லுகிற அண்ணா, அடக்கத்துடன். முன்னிரண்டு பண்புகளும் வேண்டுமளவு தன்னிடத்தில் இல்லை என்கிறார்,

24. 4. 60

✠ ✠ ✠

## அண்ணாவின் உள்ளத் தூய்மை:

'தம்பி, நமது உள்ளத்தில் தூய்மை
இருந்தால். தூற்றல்பற்றி நமக்கென்ன கவலை
அது நம்மை என்ன செய்யும்'

✠ ✠ ✠

## அண்ணாவின் மனிதப் பண்பு

'மறப்போம் மன்னிப்போம்
வசவாளர் வாழ்க
எங்கிருந்தாலும் வாழ்க!
மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும்
மணம் உண்டு'

இச் சொற்றொடர்கள் வெறும்
வார்த்தை ஜாலங்களுக்காகச்
சொல்லப்பட்டவை அல்ல
இதன்படி வாழ்ந்து காட்டிய
ஓரே தலைவர் அறிஞர் அண்ணா தான்'

✠ ✠ ✠

## அண்ணாவின் பிரச்சார முறை

தம்பி, திடுக்கிடவைப்பது நாவினால் சுடுவது பிரசார முறையில் ஒர் வகை. வாதிடுவது, வழிக்குக் கொண்டு வருவது வாஞ்சனையைப் பெறுவது- பிரசார முறையில் மற்றோர் வகை. தம்பி, நமக்கு இந்த இரண்டாவது முறையே போதும்.

19. 8, 1956

★ ★ ★

## அண்ணாவிடம் இருந்த சனநாயக உணர்வு:

கழகத்தின் சார்பில் எடுக்கப்படும் எந்த முடி . ம், என்னிச்சை

யாகவோ, எனக்கு ஏற்படக் கூடிய விருப்பு வெறுப்பினை மட்டும் கணக்கிட்டோமே மற்கொள்வதில்லை என்றாலும், எனக்கென்று ஏதேனும் ஒரு விருப்பம் எழுகின்றது என்றால் அதை நிறை வேற்றிவைக்கும் விருப்பம் கழகத்தினர் சிலருக்கு இருப்பதில்லை என்பதை பல சந்தர்ப்பங்களில் நான் உணர்ந்து வருகிறேன். உணர்ந்து என்ன பயன்?

காரணம் என்ன என்று ஆராய்வதிலே - தான் என்ன பயன்? நிலமை அவ்விதம், அவ்வளவு தான்.

15. 11. 1964

## அண்ணாவின் கடவுட் கொள்கை

பகுத்தறிவாதியான அவர் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் மனம் புண்படாமல் தன் கருத்துக்களை எடுத்துச் சொன்ன பாங்கை விவரிப்பவை இவை.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'
'நான் பிள்ளையாரரையும் உடைக்கமாட்டேன்
பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டேன்'.

'நான் காவி கட்டாத இந்து
சிலுவை அணியாத கிருத்துவன்
கைலி அணியாத முகமதியன்'

## அண்ணா சொன்ன எதிர் கட்சியின் இலக்கணம்

அவையடக்கம்— தெளிந்த அறிவு
இவை போன்றவைகள் எதிர்கட்சிகளுக்கு
இருக்க வேண்டிய லட்சணங்க்ள்
என்று நான் படித்த— அதிக அளவு
படிக்கவில்லை, ஆனால் படித்தவரை
கவனத்துடன் படித்திருக்கிறேன்
ஆனால் அகம்பாவ ் என்னை பிடித்துக்
கொண்டதில்லை!

தாக்குவது தனிமனிதனை அல்ல, ஒரு சமூகத்தையும் அல்ல! அவர் தம் கொள்கைகளை, என்கிறார் ஓர் கடிதத்தில். தனி மனிதரை தாக்கும் குணம் அவரிடம் இருந்ததில்லை.

'கழகம் 'ஆரியரை' ஒழித்திடும் வேலையை
அல்ல, 'ஆரியத்தை'

ஒழித்திடும் வேலையில் ஈடுபடுகிறது.
ஆரியம் அனந்தாசாரியிடம் மட்டுமல்ல
அம்பலவாண முதலியாரிடமும் இருக்கிறது.
ஆதிசேவு செட்டியாரிடமும் இருக்கிறது.
அந்த ஆரியம் அக்ரகாரத்தில் மட்டுமில்லை
'எட்டிப்போடா' சூத்திரப்பயலே என்ற
ஐயரின் பேச்சும் ஆரியம் தான்!
சிட்டே வராதே சேரிப்பயலே என்று
பேசும் முதலியார் பேச்சும் ஆரியம் தான்
ஆக ஆரியம் திராவிடர்களிடமும் இருக்கிறது.
அந்த மனப்பான்மை ஒழிய வேண்டும்!''

9 . . 55

★ ★ ★

## அண்ணா ஒரு துறவி

......''உருவத்தில் நாம் துறவிகளாகி விட
வேண்டும்
குடும்பம் இருக்கும்
குடி கெடுக்கும் எண்ணம் இருக்காது.
துணைவி இருப்பாள்
தம் தொண்டுக்கு துணை புரிய
குழந்தைகள் இருக்கும்
அன்புக்கான அரிச்சுவடியை உணர்த்த,
தொழிலில் ஈடுபடுவோம்
வாழ்கை நடத்த.
மடம் தேடாமல்,
தாவடம் அணிந்து சடம் ஆகாமல்
காவி தேடாமல்,
தொண்டாற்றும் துறவியாக,
அன்புக்கு இடமளித்து,
அறநெறியை நாட்டிலே புகுத்தி
தொண்டாற்றும் துறவியாக வேண்டும்''
என்கிறார் அண்ணா தம்பிக்கு
எழுதிய கடிதத்தில்.

4 · 9 · 1955

✠ ✠ ✠

## அரசியல் பற்றி அண்ணா

'அற்பதனமும் அரசியலும்
ஒன்று கலந்தால் அசிங்கமும்
அயோக்யத்தனமும்

நாட்டில் தலை விரித்தாடும்!
'சொத்து சேர்த்து விட்டு நாட்டை
நயவஞ்சகர்கள் கொட்டமடிக்கும்
காடாக விட்டு விடக் கூடாது'

★ ★ ★

## தன்னுடைய முதல் சிறை வாழ்க்கையின் மன நிலை பற்றி அண்ணா சொல்கிறார்

போராடத்தில் கலந்து கொண்டு தண்டனையை எதிர்பார்த்து அண்ணா நீதிபதியின் முன் நிற்கிறார்.

'நான்கு மாதம் என்றார் நீதிபதி.
நாலு மாதம் என்று லேடி டாக்டர்
கூறுவது கேட்டு மகிழும் ஆரணங்கு
போல் ஆனேன்' என்கிறார்

★ ★ ★

## தலைவனின் இலக்கணம்

சட்டியில் காய்கறி வேகுகிறது, அடுப்பின் வெப்பத்தை சட்டி தாங்கிக் கொண்டு, வேண்டிய வெப்பத்தை மட்டும் கொடுத்து காய்கறி வேகுகிறது தலைவன் சட்டியைப் போன்றவன் எதையும் தாங்க வேண்டும்.

★ ★ ★

## பதவி பற்றி அண்ணா

பதவிதானே! பறி போனால் தான் என்ன? என்று தம்பி, நீ வெகு எளிதாகச் சொல்லிவிடுவாய். அவர்களுக்கல்லவா அதன் அருமை தெரியும்! அது போய் விட்டால், பிறகு இவர்கள் இருக்குமிடம் நோக்கி யார் திரும்பி பார்பார்கள். இவர்கள் சென்று பார்த்தாலும் யார் முகம் கொடுத்து பேசுவார்கள்! நீ கூறிடலாம் பதவியா பெரிது. எனறு! பதவிதானே அவர்கள் நிலையை பெரிதாக்கிற்று! அதைப் போய் இழப்பதென்றால்!

## அண்ணாவின் இயக்கம்

'மனித மேம்பாடே என் இயக்கம்
தோழமையே என் மேடை
தூய மனதினர் என்பேன்
உழைத்திடின் மக்கள் நன்மைக்கே.
தொலைவிலே சிறு பொறி கண்டு
துடித்தெழும் போக்கினர் யாரும்
தோழர்களாம் எந்தனுக்கே
துணைவராம் புனித போர் தமக்கே!'

# அறிஞர் அண்ணாவின் தன் வரலாறு (14)

— Dr. சி. என். ஏ. பரிமளம் —

பல நண்பர்கள் கொள்கையில் ஆர்வமுள்ளவர்கள், இதுபோலக் கூறினர். நேரிலும். கடிதமூலமாகவும், இக்கருத்து ஒருபுறம் வந்து குவிந்தவண்ணம் இருந்தது அதேபோது......

'பெருவாரியாக நாம் இருக்கும் போது என் நாம் விலகவேண்டும்? கழகத்தை நாம் நடத்திச் செல்வோம்'' என்ற கருத்தை, ஆர்வத்துடன் வழங்கி, அந்தக்காரியத்துக்கான ஆற்றலையும் சுட்டிக்காட்டிப் பலர் கடிதமூலம் நேரிலும் தெரிவித்தனர். வேறு சிலரோ......

''இது அண்ணாத்துரையின் சூழ்ச்சி. அவன் மிகமிக முன்னேற்பாட்டுடன் திட்டம் தயாரிந்திருக்கிறன். பலமுறை ஒத்திகை நடத்திப் பார்த்து. இப்போது படையெடுக்கிறன் பெரியர் மீது. கழகத்தைக் கைப் பற்றி அதற்கென உள்ளசொத்தைக் கைப்பற்றி, அதிக்கம் செலுத்த விரும்புகிறான். அரசியல் சூதாடிகளுடன் கூடிக்கொள்ள எண்ணுகிறான் — கொடியவன் — கபடன். கயவன் - சுயநலக்காரன், — சூழ்ச்சிக் காரன்— அவன் திட்டம் பெரியாரை ஒழிப்பது என்பதுதான்— அதற்குக் காரணம் பொறாமை—'' என்று தீட்டினர் ஏடுகளில், திண்ணைப் பிரசார மூலமும் பரப்பி வந்தனர். இது மட்டுமன்றி,

''திராவிடர் கழகத்திலே ஒரு திடீர்க் குழப்பம் ஏற்பட்டு விட்டது— பிளவு அகன்ற வாய் திறந்து கொண்டிருக்கிறது— அவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு அழிந்து போய்விடுவார்கள்— திராவிடர் கழகத்தின் மூலம் நாட்டிலே பரப்பப்பட்டு வந்த கொள்கைகள் இனிப் பரவ இடமில்லை— எனவே நமது ஆதிக்கம் ஆட்டம் கொடுக்காது, புத்துயிர் கிடைக்கும்'' என்று வைதீக வட்டாரமும், காங்கிரஸ் முகாமும்; பேசிக்கொண்டிருந்தனர். அமைதியையும் தனிப் போக்கையும் விரும்பும் என்போன்ற ஒரு சிலர் ''உனக்கேன் பாரம்— பிரச்னை — தனியாக ஒதுங்கிவிடு — அந்த நிலையிலிருந்து முடிந்ததைச் செய்பவர்களைக்கண்டு மகிழ்ந்திரு—'' என்றும் கூறினர்.

இப்படிப் பல கருத்தலைகள் தாக்கும் நிலையில் இருந்த நான், பல நாட்கள், இந்தப் பிரச்னைகளைப்பற்றி சிந்திக்கவும், கலந்தாலோசிக்க வேண்டியவனானேன்.

1935 — ஆண்டு என் வாழ்க்கையில், 'முதல் முடிவு' எடுக்கும் வாய்ப்புக் கிடைத்தது — அதாவது, பட்டம் பெற்றதும் உத்தியோ

கத்துக்குப் போவதில்லை — பொதுவாழ்வுத் துறையிலே பணியாற்றுவது என்று நான் துணிந்து மேற்கொண்ட' முடிவு. அந்த ஆண்டிலிருந்து 1949 வரையில், எனக்கு மீண்டுமோர் முடிவு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதில்லை. பாதை தெரிந்து விட்டது — போய்ச் சேரவேண்டிய இடமும் தெரிகிறது, எனவே, பயணம் செய்ய வேண்டியதுதானே — அம்முறையில், இந்த பதினான்காண்டுகளும், எனக்கு அமைந்திருந்தன. இடையே சங்கடங்களும் சஞ்சலங்களும் ஏற்படாமலில்லை — ஆனால் அவை, என் முதல் முடிவை மாற்ற வேண்டிய அளவும் அல்ல, அந்த வகையும் அல்ல. எனவே சங்கடம் ஏற்பட்ட போதும், சஞ்சலம் உண்டானபோதும், 'எதையும் தாங்க இந்த இதயம் உண்டு' என்ற கவிதா வாக்கியத்தின்படி, இருந்து வந்தேன். இயக்கத்திலேயும் பெரியாரிடமும் எனக்கு இருந்து வந்தத் தொடர்பு, சாதாரணமானதாக இருந்திருந்தால், சஞ்சலம் சிறிதளவு ஏற்பட்டபோதே விரண்டோடி விட்டிருப்பேன். ஆனால் பதினாலிகாண்டுத் தொடர்பு, ஏற்படுத்திவிட்ட 'பற்றும் பாசமும்' இலேசானதல்ல. என் மனம் சுலபத்திலே சபலமடையக் கூடியதாக இருந்திருந்தால், கட்சி விட்டு கட்சி தாண்டும் காரியத்தில் தள்ளப்பட்டிருப்பேன். சபலமோ, பதவியின்மீது மோகமோ. இல்லாதவனாக இருந்ததால்தான், எவ்வளவு இடிபட்டாலும் இடர்பட்டாலும், இதே கட்சியிலேயே, முடியும் போது முன்னணியிலும்,முடியாத சமயங்களில் வேலி ஓரத்திலும் இருந்து கொண்டு வந்திருக்கிறேன். பல முறை, என்போக்கு எப்படி ஆகிவிடுமோ என்று பயந்தவர்களும், அவசர ஆரூடம் கூறியவர்களும் உண்டு. ஏதேனும் மாறுபாடு காரணமாக நான் ஒதுங்கியிருப்பேன் சில சமயங்களில் — உடனே, என்னைக் காங்கிரசார் விலைக்கு வாங்கிவிட்டனர் என்றும், நான் மந்திரியாகி விட மனப்பால் குடிக்கிறேன், என்றனர்.

திராவிடர் கழகத்திலே, தலைவருக்கும் என்போன்ற பணியாளர்களுக்கும், உள்ள தொடர்பு, மற்றக் கட்சிகளிலே ஒரு தலைவருக்கும் பணியாளர்களுக்கும் உள்ள தொடர்பு போன்றது அல்ல! இங்கு, ஒரு வகைப் பாசம் சுயமரியாதைக் கொள்கைப்படி தவறுதான் என்ற போதிலும், எதோ ஓர் வகையான 'பக்தி' — ஏற்பட்டிருந்தது. இதை யாரும் மறுக்கமாட்டார்கள் — பெருமையுடன் ஒப்புக்கொள்ளத்தான் செய்வார்கள். எவவே, மற்றக் கட்சிகளிலே, தலைவருக்கும், அவர் உடனிருப்போருக்கும் 'தகராறு' ஏற்பட்டால், தொடர்பு உடனே அறுபட்டுப்போய், தாக்குதல் துவங்கிவிடுவது போலன்றி, இங்கு, கண்ணீர்தான் சிந்தப்பட்டது. ஆச்சாரியாருக்கும் காமராஜருக்கும், காங்கிரசிலே போர் மூண்டு, இரு தாப்பும் படைதிரட்டிக். கொண்டுப் பவனி வந்தபோது இருவரில் யாரும் அழுதிருக்க முடியாது — ஆனால் நாம் அழுதோம், வார்த்தை அளவிலல்ல — உண்மையாகவே, இந்த வித

மான தொடர்பு வேறு கட்சிகளில் இல்லை — எனவேதான், நான் இந்த நெருக்கடியான கட்டத்திலே ஒரு முடிவுக்கு வருவதற்கு, காலம் தேவைப்பட்டது – பலருடைய பொறுமையைச் சோதிக்கும் அளவுக் குக் காலம் தேவைப்பட்டது.

'தூற்றிவிட்டுப் போய் விடுவது' என்ற துடுக்குத் தனமான திட்டம் என் மனதிலிருந்தால், இவ்வளவு கண்ணீர் சிந்தியிருக்கத் தேவையு மில்லை, காலத்தை இவ்வளவு கட த்தவும் தேவையில்லை,

துரோக சிந்தனை இருந்திருந்தால், இதையே சாக்காகக் காட்டி விட்டு, வேறு கட்சிக்கு ஓடிவிட்டிருப்பேன்.

துடுக்குத் தனம் துரோகச் சிந்தனை என்பவைகள் இலலாததால் தான் இடர் மிகுந்த நிலையிலே, மூன்று தினங்களுக்கு மேலாக இருந் திட நேரிட்டது.

இந்த நேரத்திலே, நான் என்ன முடிவுக்கு வர இருக்கிறேன் என் பதை அறிய முயற்சிக்காமல், இயக்க அன்பர்கள் சிலர், தத்தமக்குத் தோன்றிய விதமாக வெல்லாம் ஆருடம் கணிக்கலாயினர் — சிலர் நேர்மையுடன், வேறு சிலர் இச்சமயம் தவறினால் மறுசமயம் வாய்ப்ப தரிது என்ற போக்கிலே. அவர்களின் பிரசார முறை பழைய பாணி — இக்காலத்துக்குத் தேவைப்படுவதல்ல – எனினும் அது தான் அவர்கள் அறிந்தது.

பெரியார் மீது படை எடுத்துத் தலைமைப் பீடத்தைப் பறித்துக் கொள்ள மிக மிகப் பலமான, முயற்சி திட்டப்படி நடை பெறுவதாகப் பிரச்சாரம் செய்யலாயினர்.

நானோ, நண்பர்களோ எவ்விதமான முடிவுக்கும் வராமல் எக்கத் துடன் இரு ந்துக் கொண்டு, 'எம்மை இக்கதிக்கு ஆளாக விட்டது என்' என்று தலைவரிடப் முறையிட்டுக் கொண்டிருந்த சமயத்திலே, அந்தப் பிரசாரம் நடை பெற்றது — ஏடுகள் மூலம் — துண்டு வெளியீடுகள் மூலம் — தூது மூலப் .

திருமணத்தை நிறுத்தாவிட்டால், அவருடைய தலைமையில் கீழி ருந்து பணியாற்ற முடியாது ஏன்று மட்டுமே அப்போது நானும் நண் பர்களும் முடிவு செய்து, கருத்து வெளியிட்டிருந்தோம், தீர்மான உரு விலும், அறிக்கை வடிவிலும்.

யாரும், இந்த நிலையைப் பற்றிக் கலந்து பேசி, சிக்கலைப் போக்க முயற்சிக்கவும் இல்லை.

2 · 10 · 1949

அப்பாவி என்று உங்களையும், துரோகி என்று என்னையும் இப்போது அவர் தூற்றுகிறார், 'ரத்தினங்கள்' என்று உங்களையும், ''பெட்டிச் சாவியைத் தருகிறேன்' என்று என்னைக் குறித்தும், புகழ்ந்திருக்கிறார். ஆயிரம் மேடைகளிலே கூறியிருக்கிறார், ''எம். ஏ. படித்து விட்டு இந்த அண்ணாதுரை என்னோடு சுற்றுவதற்குப் பதிலாக, காங்கிரசில் இருந்தால், இன்னேரம் ஒரு மந்திரியாகி இருக்க மாட்டாரா? என்ன இலாபம் என்னேடு இருப்பதால்?'' என்று! 'ஊராரின் தூற்றலையும் உற்றார் உறவினரின் விரோதத்தையும் ஏற்று கொண்டு என்னைப் பின்பற்றும் தோழர்கள்'' என்று உங்களை எல்லாம் பாராட்டியிருக்கிறார், பன்முறை இப்போது நீங்களும் நானும், 'தலையாட்டிகளாக' மறுக்கிறோம். கோபத்தால், ஏதேதோ கூறுகிறார்; நஷ்டம் என்ன நமக்கு அதனால்! அவருடைய பாராட்டுதலை நிரம்பப் பெற்றிருக்கிறோம் — அதை எண்ணி ஆறுதல் பெறுவோம்.

இப்போது அது போதாதென்று, கழகத்தோழர்களிலேயே சிலரும் என்னைத் தூற்றுகின்றனர் — இவ்வளவுதான்! பெரியாருடன் பணி புரிந்தபோது, மற்றக்கட்சியினர் தூற்றினபோது சசித்துக்கொள்ள முடிந்ததே, அந்தப்பண்பு எனக்கு பட்டுப் போகவில்லை —சற்று வளர்ந்திருக்கிறது. பட்டகஷ்டத்தால், அவரிடம் பெற்றப் பாடத்தால், ஆகவே, 'துரோகி' என்று என்னை ஆத்திரம் காரணமாக அவரே தூற்றும்போதும்சரி, அவரை மகிழ்விக்கும் வழி என்னைத்தூற்றுவது தான் என்று எண்ணிக்கொண்டுபேசும். ஒருசிலர் என்னைத் 'துரோகி' என்றுதூற்றும்போதும்சரி நேர்மைக்காக, நீதிக்காக' திராவிடமக்களின் உரிமைக்காகப் பாடுபடும் பெரியாரை, ஆதிக்கக்காரர்கள் அரசியல், சூதாடிகள், வைதீக வக்கிரங்கள், ஆகியோர், தேசத்துரோகி, மதத்துரோகி. என்றுத்தூற்றுகிறார்களல்லவா —அந்தத்தூற்றல், எப்படி ஏமாற்றத்தால் ஏற்படும் ஆத்திரத்தின் விளைவோ, அது போன்றதே தான் என்னைத் 'துரோகி' என்று தூற்றுவதும், என்று எண்ணி மனதைச்சமாதானப்படுத்திக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலம், அரசியல் சூதாட நான் விரும்பவில்லை, அப்படி அந்தச் சூதாட நான் விரும்புவனானால், பல வருஷம் பணியாற்றிய கழகத்தை அதற்கு பயன்படுதத முயன்றிருப்பேன் —முடியாது என்று ஏற்பட்டால் தனேபுதுமுயற்சியில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் எனக்குஏற்படும். அதுபோன்ற 'முயற்சி' நான் எப்போதாவது செய்து பெரியார், என்னைத்தடுத்தாரா, கழகத்தவருக்குச் சொன்னாரா? சேலம் மாநாட்டுக்குப்பிறகு தேர்தல் விவகாரத்திலே, அக்கரையே அற்றுப்போயிருப்பவன்நான், திருச்சிமாவட்டத்திலே சிலதிங்களுக்கு முன்பு ஒரு இடைக்காலத்தேர்தல் வந்தபோது, கரூர்தோழர்இரத்தினம் அபேட்சராக நிற்கவிரும்பியபோது, அவரைக் கழகத்திலிருந்து ராஜி நாமாச் செய்யும்படி வலியுறுத்தி, கடிதம்எழுதி



217213 JL

வாங்கியிருக்கிறேன். சேலம் மாநாடுக்குப்பிறகு இன்றுவரை, எந்தத் தேர்தல் பிரசாரக்கூட்டத்திலும் நான் கலந்து கொண்டவனல்ல பெரியாராவது சில இடங்களிலே பேசியிருக்கிறர். இவ்விதமாக நான் இருந்துவருகிறேன்— இருந்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உள்எண்ணம் 'பதவி தேடுவது— தேர்தலை நாடுவது' என்று பழிசுமத்துவது' சரியல்ல—என்பது பழிசுமத்திப் பேசுபவர்களுக்கே தெரியும் — ஆயினும் பாவம், அவர்கள் என்ன செய்வார்கள், நமது முயற்சியைக்குலைக்க, எதையாவது சொல்லவேண்டுமே, என்பதற்காக பொருளும் பொருத்தமும் அற்றபழி சுமத்திப்பார்க்கிறர்கள், இதுபலனற்ற வேலை, எனவே, இதைக் குறித்துக் கவலைப்பட வேண்டாமென்று திராவிட முன்னேற்றக்கழகத்தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏதோ நானும் ஒருசில நண்பர்களும், பொதுவாழ்வில் புகுந்திருப்பதே, வயிற்றுப் பிழைப்புக்காகத் தான், என்று கூறுகிறர்கள். இதை விடக் கேவலமாக ஏச முடியாது; சகித்துக்கொள்கிறேன். பொதுமக்கள், 'கப்பரையும் கையுமாகக் கஞ்சிக்கலையும் 'நிலையில் நான் இருந்ததைக் கண்டதில்லை, பெரியாருடன் கூடி நான் பொன் ஒடு' பெற்றதையும் காணவில்லை! எனவே, அவர்களின் தீர்ப்பு எப்படி இருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

பொது வாழ்கையிலே இப்படிப்பட்ட 'இழி மொழி'யைப் பெறுவது நிலாச் சோறு — உண்மை நஞ்சு அல்ல! எத்தனை ஆயிரம் பேர் கூற நான் கேட்டிருக்கிறேன் என் பாழும் காதால், பெரியார் முஸ்லீம்களிடம் பணம் வாங்கிக் கொண்டு பேசுகிறார், வெள்ளைக்காரனிடம் பணம் வாங்கிக் கொண்டு பேசுகிறார், காங்கிரசில் பணம் எடுத்துக் கொண்டு போய்விட்டார், என்ற பழிமொழிகளைப் பலர் கூறுவதைக் கேட்டிருக்கிறேன் அதனால் எனக்கு அவரிடம் பற்றே மதிப்போ, போயிற்றா அதுபோலத்தான் இப்போது நான் தூற்றப் படுகிறேன்— இதிலே வருத்தப்பட என்ன காரணம் இருக்கும் — அலசிப்பார்த்தால் சந்தோஷம் கூட வரும், ''ஓஹோ! நம்மை இப்படி எல்லாம் 'பழிபேசி' தான் ஒழிக்க முடியும் என்று நிலைமை வளர்ந்திருக்கிவது போலும்'' என்று எண்ணத் தோன்றும். நான் அந்த அற்ப சந்தோஷம் கூடப்படவில்லை, நான் என்னை 'பெரியார் பரம்பரை' என்று எண்ணிக் கொண்டு பூரிப்படைகின்றேன்—'பெரியார் பரம்பரை' என்றால், வீண் பழியையும் இழி மொழியையும் தாங்கிக் கொள்ளும் பண்பு என்று நான் பொருள் கொள்கிறேன் நண்பர்களே! என்னைத் தூற்றுவது போலத் தான், உங்களையும் தூற்றி வருகிறார்கள் — கவலையும் வருத்தமும் கொள்ள வேண்டாம் — இப்போது போலவே, ஆர்வத்துடன், திராவிட முன்னேற்றக்கழகத்தை ஆங்காங்கு அமைக்கும் அரும்பணியைத் திறம்படச்செய்ய வாருங்கள்— பிறகு பாருங்கள், தூற்றினவர்கள் தோழமை கொண்டாட வரும் காட்சியை,

திருமணப் பிரச்னையைச் சாக்காகக் கொண்ட நாம், திராவிடர் கழகத்தைக் கைப்பற்ற முயற்சிப்போம். அந்தப்பேச்சை வைத்துக் கொண்டு நம்மை ஒழித்துக் கட்டலாம், என்று எண்ணினர் எமாற்ற மடைந்தனர் — நாம் வேறுபாதை வகுத்துக் கொண்டோம் — திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்துக் கொண்டோம் தாக்குதல் இருக்கும் — போகள் நடைபெறும் — படை எடுப்புகள் இருக்கும் — என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தனர் — பாதை புதிது, போகிறேன் பரபரமே! என்று நாம் கூறிவிட்டோம் தீட்டிய வாள் வீணாகிறதே, திரட்டியபடைக்குலேலை இல்லையே, என்று திகைப்பு ஏற்படுகிறது — சரி, இனி, வலியச் சென்று சண்டைக்கிழுக்கலாம் என்று தோன்றுகிறது — உங்களை 'அப்பாவி' என்றும், என்னைத் 'துரோகி' என்றும் தூற்றுவது அந்த ரகமான பேச்சுத்தான்! ஆனால் நாம் திகைப்பது இல்லை — தெளிவாக இருக்கிறோம் — எனவே, தூற்றல் கேட்டுத் துடி துடித்திட மறுக்கிறோம்.

9 · 10 · 1949

நான் துரோக சிந்தனையுடன் உங்களைத் தூண்டி விட்டதாகவும், நீங்கள் எமாந்து போனதாகவும் எண்ணிக்கொண்டே, மேலால், கருத்துக் கோட்டை கட்டுகிறார். உண்மையில், நடந்தது வேறு, நீங்கள் தெளிவுடனும் தீரத்துடனும், தெரிவித்த எண்ணங்கள், என் மனதிலே கருத்தை உருவாக்கிற்று. அதை அவர் அறியமாட்டார். அடிப்படையிலே அவர் தவறு செய்வதால் தான், மேலால் கிளம்பும் ஒவ்வொன்றும், நிலைக்கமுடியாமல் கனவாகின்றது, எனக்குப்பொது வாழ்விலே சலிப்பு ஏற்பட்டதுண்டு பலமுறை—எப்போதும் அதிலிருந்துகொண்டு பொற்கோட்டை கட்ட வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததில்லை, நன்றக நினைவிலிருக்கிறது—ஒரு மோட்டாரில், பெரியாருடன், நானும் பொன்னம்பலனாரும், ஜோலார்ப்பேட்டை பக்கமாகப் போய்க் கொண்டிருக்கிறேம், பத்தாண்டுகளுக்கு மேலிருக்கும். நான்சொன்னேன், 'பொதுவாழ்க்கைக்கு நாற்பதுக்குமேல்தான்வரவேண்டும், ஏனெனில். நாற்பது வயது வரை, குடும்பவாழ்வில் ஈடுபட்டு் குது கலமாக இருந்து விட்டு அனுபவிக்க வேண்டியதை அனுபவித்து விட்டுப் பிறகு பொது வாழ்வில், புகுந்தால், உங்களைப் போல மும்முரமாக, தீவிரமாக வேலை செய்ய முடியும் என்றேன் — முதுகைத் தட்டியப்படி பெரியார் சொன்னார், முகமலர்ச்சியுடன் நீ, பைத்தியக்காரன்! பொது வாழ்வில் இருந்தபடி, வாழ்விலின்பத்தை அனுபவிக்க முடியாதா, என்ன,! உனக்கு அது தெரியவில்லை'' என்றார். அன்று இருந்து இன்று வரை, பொது வாழ்வைச் சொந்தத்துக்காகப் பயன் படுத்தும் போக்கு என்னிடம் என்ன கண்டார்? கண்டிக்கும் உரிமை உண்டே அவருக்கு, எப்போதாவது என்னைக் கண்டிக்க வேண்டிய சந்தர்ப்பம்

வந்ததா? இப்போது அவரும்அவர் ஆதரவாளர்களும் கூறுகிறார்களே, ஆகஸ்ட்டு, கருப்பு சட்டை போடாதது, தூத்துக்குடி போகாதது, வேலைக்காரி, நல்லதம்பி எனும் கதைகள் தீட்டியது என்று ஒரு பட்டியல்' இவைகளுக்கெல்லாம் பிறகுதானே, ஈரோட்டில், 'பெட்டிச் சாவியை'த் தந்தது! எப்படி முடிந்தது? இந்தத் துரோகி' ஈரோடு மாநாட்டிலே, பெட்டிச் சாவி'யைப் பெற்றானே! ஒரு தோழராவது, அப்போது, இன்று பேசும், 'துரோகம்' பற்றி, எண்ணினார்களா? பெரியார்க்கு தான், அப்படி எண்ணம் இருந்ததா? இருந்தால் அவர் கூறுவாரா, "பெட்டிச் சாவியை ஒப்படைக்கிறேன்" என்று.

9 · 10 · 1949

(தொடரும்)

---

# பாவேந்தர் விருது பெற்ற புலவர் இளஞ்செழியன்

பெரியார் வழியில் பிறழாதவர், அண்ணா வழியில் அயராதவர் பாவேந்தர் வழியில் பாடும் குயில், "மூச்சு நிற்கும் வரை தமிழ் முழக்கம் தொடரும்" எனும் கொள்கை முரசும், இது தான் புலவர் இளஞ்செழியன். இவர் ஓர்எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர் நாடகஆசிரியர், நூலாசிரியர், பத்திரிக்கையாளர், விழா மலர்களை உருவாக்கி 'மலர்மாமணி' எனும் பட்டத்தைப் பெற்றார்.

இவர் 'பாவேந்தர் விருது' பெற்று அரசால் பாராட்டப் பட்டதை அறிந்து நாமும் பாராட்டுகிறோம். பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் சார்பில் நமது வளத்தையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# திராவிட இயக்கம் வளர்த்த தமிழ்

—மு. வயலூர்க்குமரன்—

,கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
முன் தோன்றி மூத்த மொழி' நமது தாய் மொழியாம்
தமிழ் மொழி.

தமிழில் இறைவனையே கண்டனர் நம் முன்னோர்,
சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட மொழி நம் தமிழ் மொழி.

அரியணைகளில் வீற்றிருந்து கோலோச்சிய மொழி, அறிவார்ந்த புலவர் பெருமக்களின் நாவிலே தவழ்ந்த மொழி- அரும் பெரும் இலக்கியங்களைப் படைத்திட்ட மொழி நம் தாய்மொழி.

சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, அகநானூறு— புறநானூறு பத்துப்பாட்டு— எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு பதிற்றுப் பத்து— பாணாற்றுப்படை போன்ற சாவாத பேரிலக்கியங்களையுங் உலகப் பொதுமறையாம் திருக்குறளையும் ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன்னரே படைத்தளித்து உயர்தனிச் செம்மொழியாய் விளங் குவது நம் தமிழ்மொழி.

இடைக் காலத்தில் வரலாற்றில் ஏற்பட்ட விபத்துக்களாலும் வடமொழியின் நாசப் படையெடுப்புக் காரணமாகவும் நம்மருந்தமிழ் மொழி சிதையவும் உருமாறிடவும் நேர்ந்தது. இந்த நிலையை மாற் றிக் கன்னித்தமிழின் தனித்தன்மை காத்திடப் பாடுபட்ட பெரியோர் பலர் இருந்திடவே செய்தனர்.

மேலை நாடுகளிலிருந்து இங்கே வந்து தமிழ்மேற் காதல் கொண்ட ஜி. யு. போப், கால்டுவெல், வீரமா முனிவர் போன்ற பெரு மக்கள் நம்மருந்தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள அருந்தொண்டுகள் என் றென்றும் நினைவுகூரத் தக்கனவாகும்

தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்காகப் பல பெரியோர்கள் வழி வழியாகப் பாடுபட்டுக் கொண்டே தான் வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுத்திட இயலாது. எனினும் தமிழுணர்வை மக்களிடம் பரப்

பிடப் புயல் போலப் புறப்பட்டு வந்தார் ஒரு தகைமையாளர். அவர் தான் பேரறிஞர் அண்ணா. அவர் தமிழுக்குப் புதியதொரு மெருகினைக் கொடுத்தார். தமிழ் நடையினில் புதியதொரு எழுட்சியினைத் தோற்று வித்தார். அவருடைய எழுத்துக்களும் சொற்பொழிவுகளும் மக்களுக்குத் தமிழின்பால்பற்றையும் பாசத்தையும் ஏற்படுத்தின. வடமொழிச் சொற்களை ஏராளமாகக் கலந்து மணிப்பிரவாளத் தமிழென்று தமிழைச் சிதைத்து உருவாக்கப் பட்டிருந்த நிலை அண்ணாவின் வருகையால் மாற்றமடைந்தது. அண்ணாவின் அயராத தொண்டுக்குப் பின்னர்தான்-

| | | |
|---|---|---|
| அக்கிரா சனாதிபதி | — | தலைவர் ஆனார் |
| பிரசங்கம் | — | சொற்பொழிவு ஆயிற்று |
| காரியதரிசி | — | செயலாளர் ஆனார் |
| உபகாரியதரிசி | — | துணைச் செயலாளர் ஆனார் |
| பொக்கிஷதார் | — | பொருளாளர் ஆனார் |
| பொதுஜனம் | — | பொதுமக்கள் ஆயினர் |
| காரியக் கமிட்டி | — | செயற்குழு ஆயிற்று |
| ஜில்லா | — | மாவட்டம் ஆயிற்று |
| தாலுகா | — | வட்டம் ஆயிற்று |
| மந்திரி | — | அமைச்சர் ஆனார் |
| சபா நாயகர் | — | பேரவைத்தலைவர் ஆனார் |
| இலாகா | — | துறை ஆயிற்று |
| அதிகாரி | — | அலுவலர் ஆனார் |
| ஜே | — | வாழ்க ஆயிற்று |
| நமஸ்காரம் | — | வணக்கம் ஆயிற்று |
| வந்தனம் | — | நன்றி ஆயிற்று |

இவ்வாறு அரிசியுடன் கல் கலந்தது போல் நெல்லுடன் பதர் கலந்தது போல் நல்ல பயிருடன் களை ஊடாடியது போல் தமிழுடன் கலந்து கிடந்த வடமொழிச் சொற்கள் திராவிட இயக்கத்தின் அரும் பணி காரணமாகக் களைந்தெறியப் பட்டன. ஏடுகளிலும், மேடைகளிலும் அரங்குகளிலும் தூயதமிழ் துள்ளிவிளையாடத் தொடங்கியது.

தமிழுணர்வு முகிழ்ந்தெழுந்த காரணத்தால் தமிழ்மக்கள் தம்குழந்தைச் செல்வங்களுக்குத் தூயதமிழ்ப் பெயரிட்டு மகிழ்ந்தார்கள்

| | | |
|---|---|---|
| இளங்கோ | — | பொற்செல்வி |
| நெடுஞ்செழியன் | — | தமிழ்ச்செல்வி |
| அன்பழகன் | — | கலைவாணி |
| மதியழகன் | — | மலர்விழி |

மாறன் — சுடர்விழி
நல்லதம்பி — கண்ணகி
மதிவாணன் — மணிமேகலை

என்றெல்லாம் தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவதில் பெருமையடைந் தார்கள்.

அக்ரகாரத் தமிழ் ஆட்சி புரிந்து கொண்டிருந்த நாடகங்களி லும் திரைப்படங்களிலும் செந்தமிழ் உரையாடல்களும் செவியில் தேனாறாகப் பாய்ந்தன.

இவ்வாறு தமிழர்கள் தமிழின் பெருமையை உணர்ந்து தமிழர் களாக வாழ்ந்திடத் திராவிட இயக்கத்தின் சீரிய பணி பெரிதும் காரண மாக அமைந்தது இன உணர்வும் மொழிவுணர்வும் மிக்க தமிழ் மக்க ளின் தொகை உயர்ந்தது. 'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்' என்ற புரட்சிக் கவிஞரின் கூற்றுக்கிணங்கத் தமிழ்ப் பகைவர்கள் ஓடி ஒளிந்து கொண்டனர்.

பேரறிஞர் அண்ணா தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்னர், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் நடத்தித் தமிழின் பெருமையை உலகறியச் செய்தார். அப்போது தான் சென்னையில் தமிழ்ப் பெரியோர்களுக்குச் சிலைகள் அமைக்கப் பட்டன. சென்னையில் —

பாரீஸ் கார்னர் — பாரிமுனை ஆயிற்று
கெல்லீஸ் — கிள்ளியூர் ஆயிற்று
ஃபோர்ஷோர் எஸ்டேட் — பட்டினப்பாக்கம் ஆயிற்று
மர்மலாங் பிரிட்ஜ் — மறைமலையடிகள் பாலம் ஆயிற்று.

இவ்வாறு எங்கும் தமிழ் மணம் கமழும் வகையில் திராவிட இயக்கம் அரும்பணியாற்றியது.

இப்போதெல்லாம் தமிழ்மக்கள் தம் குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயர்கள் சூட்டுவதில் ஆர்வம்காட்டுவதில்லை. வடமொழியில் புரியாத பெயர்கள் குட்டுவதைப் பெருமையாக நினைக்கிறார்கள். குழந்தைக ளைத் தமிழ்வழிக் கல்விபயில அனுப்புவது மதிப்புக்' குறைவு என்ற எண்ணம் மேலோங்கி நிற்பதால் ஆங்கிலவழிக் கல்விக்கு அனுப்புவ தில் பேரார்வப் கொள்கிறார்கள் பிறமொழிகளின் ஆதிக்கத்தால் நம் தாய்மொழியாம் தமிழுக்கு நேரும் கேடுகளைப் பற்றி அவர்கள் சிந்தி த்துப் பார்ப்பதில்லை உடையணிவதில்கூட மேலை நாட்டு முறையில் அல்லது வட நாட்டு முறையில் உடையணிவது நாகரிகமென்று கருதுகி

றார்கள் சுருங்கக் கூறின் இனவுணர்வும் மொழியுணர்வும் நம் மக்களிடம் குறைந்து கொண்டே வருகின்றன,

இந்தநிலை நீடிக்குமானால் தமிழும் தமிழ்நாடும் மீண்டும் ஒர் இருண்ட காலத்தைச் சந்திக்க நேரிடும். அந்த நிலையைத் தவிர்த்திட அண்ணாவழியில் தமிழ்த் தொண்டைத் தொடர்ந்துஆற்றிட வேண்டும். தமிழ்மக்கள் இனஉணர்வும் மொழியுணர்வும்கொண்டவர்கள் என்ற நிலையை மீண்டும் உருவாக்க வேண்டும்' திராவிட இயக்கத்தால் தான் இந்தப்பணியைச் செவ்வனே நிறைவேற்றிட இயலும் திராவிட இயக்கம் இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புவோமாக!

வாழ்க தமிழ்!
வளர்க தமிழுணர்வு!

---

# மாமேதை- அண்ணா

## பட்டி. சு, செங்குட்டுவன்

1 ஆதிக்கத்தின் வேரறுக்க வந்த வீரன் — புதுமை
அவசியத்தைக் காலூன்ற வைத்தத் தீரன்.
சாத்திரத்தின் சகதியை அறிவுநீரால் — நீக்கி
சமநீதி தழைத்திடவே உழைத்த வேழம்.
கோத்திரங்கள் கொலுவிருந்த வாழ்வை — உயர்
கொள்கையென அணைத்திருந்த தாழ்வை
மாத்திறத்தால் உடைத்தெறிந்த மேதை — அண்ணா
மனிதருக்குச் சிறப்பூட்டும் மேடை.

2 நாவலந்தண் பொழிலின் நாடு — இது
நனைந்து கிடந்ததாரியத்தோடு
காவலர் தானில்லா வயற்காடாய் — மூட
கள்ளிகளே செழித்தது வளப்போடு.
சேவலைப்போல தமிழ்க் கூவி நாம்
தினம் விழிக்க புத்தியினைக் கூறி
ஆவலைப் பொழிந்தூட்டி அண்ணா — நல்
அன்பாலே இனைத்தாரு ஒன்றாய

3 தம்பிக்கு கடிதங்கள் தீட்டி — அண்ணா
தடையினைச் சாய்த்தவோர் ஈட்டி.
வெம்பிக் கிடந்த நிலை ஒட்டி — எழுச்சி
வெற்றிக் கொடியை இங்கு நாட்டி
தம்பிக்கை பேரொளி ஊட்டி — மீண்டும்
நற்றமிழ் நாடென்று மாற்றி
அம்பும் வில்லுமாய் அண்ணா — நம்மில்
அய்க்கிய மனாரு கண்ணா

# பெரியார் பேசுகிறார்

எந்த மனிதனும் எனக்குக் கீழானவன் அல்ல. அது போலவே எவனும் எனக்கு மேலானவனும் அல்ல. ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவும் சமத்துவமாவும் இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள். இந்த நிலை ஏற்படச் சாதி ஒழிய வேண்டும்.

மனிதன் உலகில் தன் சுயமரியாதை- தன்மானத்தை - உயிருக்குச் சமமாகக் கொள்ளவேண்டும்.

மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம். மானமற்ற ஒருவனுடன் போராடுவது சிரமமான காரியம்.

நம் மக்கள் சமுதாயமானது பல சாதி, பலமதம், பல பிரிவாக இருக்கிறது. நம் நாட்டிலிருக்கிற மனித சமுதாய பேதம் ஒழிய வேண்டும். இதை எவனோ ஒருவன் செய்யட்டும் என்று இருக்கக் கூடாது. நாம் ஒவ்வொருவரும் நம் சமுதாயத்திற்காக ஏதாவது செய்யவேண்டுமென்று கருத வேண்டும்.

மானத்தைப் பற்றிக் கவலை இல்லாதவன் எவ்வளவு படித்தவனானாலும், அவனது படிப்பும் மானாபிமானம் உள்ளவர்களுக்கு ஆபத்தாகவே முடியும்.

சோறு இல்லாதவனுக்குச் சோறும், உடை இல்லாதவனுக்கு உடையும், வீடு இல்லாதவனுக்கு வீடும் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு நியாயமோ, அதுபோல கல்வி இல்லாதவனுக்குக் கல்வி கொடுக்கவும் வேண்டும்.

நமது கல்வி முறை மாறவேண்டும். படிக்கும்போதே அத்துடன் தொழிலும் பயில வேண்டும். எந்த வகுப்பில் ஒருவன் படிப்பை நிறுத்தினாலும் அவன் தொழில் செய்து பிழைக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். மக்கள் அத்தனைப்பேரும் தொழில் பழகியவர்களாக இருக்க வேண்டும்.

# மொழி-கலை-இலக்கியத் துறையில்
# அண்ணாவின் அரும்பணி

தமிழ் மொழி பாமரருக்கு எட்டாக் கனியாக இருந்தது — ஒரு காலத்தில்; நண்பர் அண்ணாத்துரை, தமது பேச்சாலும் — எழுத்தாலும், பண்டிதத் தமிழுக்கும் — பாமரர் தமிழுக்கும் இடையே ஓர் உறவை ஏற்படுத்தினார்! மக்களுக்கும் - இலக்கியத்திற்கும் இடையே நிலவிய இடைவெளியைக் குறைத்தார்; அதன் விளைவாகப் புதிய புதிய எழுத்தாளர்களை — பேச்சாளர்களைத் தோற்றுவித்த பெருமைக்கு உரியவரானார்! தமிழ் மொழியின் வளர்ச்சியில் நாட்டமுடைய எவரும் இதனை மறுக்க மாட்டார்கள்.

ம. பொ. சிவஞானம்
'முரசொலி' அண்ணா மலர் (1964)

'தமிழ்' என்பது தமிழ்ப் புலவர்கட்கு மட்டும் உரிய தனி உடைமை எனக் கருதப்பட்டு வந்தது; அந்நிலையை மாற்றி, 'தமிழ் யாவர்க்கும் உரியது' என ஆக்கி, இனிய தமிழில் பேசுதலையும் — எழுதுதலையும நாகரிகப் பெருவழக்காக நாட்டில் நிலைநாட்டிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களையே சாரும்!

சி. இலக்குவனார்
'முரசொலி' அணணா மலர்(1964)

இருபதாம் நுற்றாண்டுத் தமிழ் இலக்கியம், தனிச் சிறப்பும் — மறுமலர்ச்சிப் போக்கும் உடையதாகும்! அது புரட்சியில் கிளைத்துப் புதுமை பூத்துப் பொலிகிறது.

இவ்வளர்ச்சியில் பங்கு பெறும் சான்றோர் பலருள் அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலையாய இடம் பெறுகிறார்கள்

இவருடைய சிறுகதைகள் புதுப்போக்கு உடையன. ஏழ்மையின் சார்பாக வாதிடும் நோக்கமும், செல்வச் செருக்கைக் கிள்ளியெறியும் கருத்துக் கூர்மையும் மிக்கன!

நாடகத் துறையிலும், திரைப்படத் துறையிலும் இவர் எழுதிய 'ஓர் இரவு' — 'வேலைக்காரி' — 'நீதிதேவன் மயக்கம்' முதலியவை பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின!

நாடகம், திரைப்படங்களில் வரும் உரையாடல்களில் 'விறு விறுப்பு' உண்டாக்கிய பெருமை இவரையே சாரும்!

உள்ளத்துடன் உள்ளம் உறவாடும் நோக்கில் இவர் எழுதும் கடித வடிவான கட்டுரைகள் படிப்போரின் உள்ளத்தைச் செயற்படுத்தும் வன்மை மிக்கன!

தமிழண்ணல்
('குறள் நெறி' 15 - 9 - 1964)

தமிழகத்தில் பல்லாயிரம் இளைஞர்களை நல்ல தமிழில் பேசப் பழக்கி வரும் அறிஞர் அண்ணாதுரை, 'சந்திரமோகன்' — 'நீதி தேவன் மயக்கம்' — 'ஓர் இரவு' — வேலைக்காரி — சொர்க்கவாசல்' முதலிய நாடகங்களை எழுதியுள்ளார்.

அவற்றுள் சிலவற்றை பம்மல் சம்மந்த முதலியார் போலவே, நூலாசிரியரே நடிப்பது வழக்கம். பேச்சுக்கலையில் சிறந்து விளங்குவது போன்றே அண்ணாதுரை, நடிப்புக்கலையிலும் சிறந்து விளங்கி வருகின்றார்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
('தமிழகக் கலைகள்' : பக்கம் 114 - 115)

'திராவிட நாடு' எழுத்து மூலங்கள் புத்தகமாக வெளியிடப்பட்டால், அவை வருங்காலத்தில் ஐந்து கண்டங்களும் போற்றத்தக்க தமிழ் இலக்கியப் பகுதிகளாக விளங்கும் என்று உறுதியாகக் கூறலாம்.

கா. அப்பாத்துரையார்
('முரசொலி, அண்ணா மலர் : 1972)

தோழர் அண்ணாத்துரை கருத்துப் புரட்சி செய்து வரும் வீரர்! அவர் எழுதும் தலையங்கங்களிலும், பேசும் பேச்சுக்களிலும் புரட்சி வித்துக்கள் நிறைந்துள்ளன! அவை, படிப்பவர் உள்ளத்திலும் ... கேட்பவர் நெஞ்சிலும் கருத்துப் புரட்சியை விதைத்து வளர்க்கின்றன!

டாக்டர் மு, வரதராசனார்
(1949 - ஆம் ஆண்டில்)

"......அவரது (அண்ணாவின்) திறமைகள் அரசியலில் மட்டுமல்ல — தமிழ் நாட்டின் கலை, இலக்கியத் துறைகளிலும் தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது!

''சிறு கதை, நாடகம், நாவல் — இப்படிப் பல இலக்கியப் படைப்புகளுக்கும் அவர் முன்னோடியாகத் திகழ்கின்றார்!

கவிதையில் பாரதியார் கையாண்டதைப் போன்று எழுத்துத் துறையில் புதுமையையும் புரட்சியையும் அவர் பின்பற்றினார்.

''வார்த்தைகளையும் — எழுத்துக்களையும் கலையழகுடன் பயன்படுத்தும் அண்ணாதுரையின் ஆற்றல் பிரசித்தமானது.

''தமிழகம் முழுவதிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கும் அண்ணாதுரை அவர்களின் மேடைப் பேச்சுக்களும், பத்திரிகைக் கட்டுரைகளும், தமிழக இலக்கிய உலகு மட்டுமல்ல... அரசியலோடு தொடர்புடைய அனைவரும் விரும்பி அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒன்றாகும்!''

எஸ். இராமகிருஷ்ணன்

('கேரள சப்தம்' எனும் மலையாள ஏட்டில்)

தொகுப்பு: இரா. இராமசாமி

---

பாராளுமன்ற வளாகத்தில்

## அண்ணா உருவச்சிலை

புதுடெல்லி, ஆக. 20—

தமிழக முன்னாள் முதல் - அமைச்சர் அண்ணாவின் உருவச்சிலை பாராளுமன்ற வளாகத்தில் வைக்கப்படுகிறது.

தேசிய தலைவர்களின் உருவப்படங்கள், சிலைகளை பாராளுமன்ற வளாகத்தில் வாளகத்தில் வைப்பது பற்றி முடிவு எடுக்க பாராளுமன்ற குழு ஒன்று செயல்பட்டு வருகிறது.

தமிழக முன்னாள் முதல் அமைச்சர் அண்ணாவின் சிலையை பாராமன்ற வளாகத்தில் அமைக்க வேண்டும்'' என்ற கோரிக்கையை அந்த குழு பரிசிலித்து, அண்ணா சிலை அமைக்க அனுமதி அளித்துள்ளது.

இதைபோல் மறைந்த ஜெயபிரகஷ் நாராயணன், டாக்டர் ராதாகிருஷ்ணன், ஆச்சாரிய நரேந்திரராவ் பகத்சிங், ஜெகஜீவன் ராம், ஒய். பி சவான், தல்பாய் படேல், பூபேஷ்குப்தா, எஸ். ஏ. டாங்கே, ஏ கே கோபாலன் ஆகியோரின் சிலைகளை பாராளுமன்ற வளாகத்தில் வைக்கவும் அந்த குழு அனுமதி வழங்கி உள்ளது.

# அண்ணாவின் மேடைத் தமிழ்

அ. க. மூர்த்தி

## அண்ணா பேச்சுகளின் நடை

பார்புகழும் பேச்சுக் கலையில் முடிசூடா மன்னராக விளங்கியவர் பேரறிஞர் அண்ணா. தம் நாவராலேயே இவ்வுலகத்தை ஆட்டிப்படைத்தவர் அவர். நாவசைத்தால் நாடசையும் என்னும் ஒரு நிலையை உருவாக்கியவர். அவர் தம் பேச்சுகள் பல நயங்களையும் நலங்களையும், நுணுக்கங்களையும் நுட்பங்களையும் கொண்டவை.

பொதுவாக, நடை என்பது கருமையின் வெளிப்பாடே. அண்ணாவின் ஆன்ற ஆளுமை அவர்தம் பேச்சு நடையில் பட்டைதீட்டிய வைரம் போல் பளிச்சிடுகிறது அவர் தம் சீரிய நடையில் கையாளும் உத்திகள் பின்வருமாறு.

1 உவமை: கருத்துத் தெளிவிற்காகப் பயன்படுத்தப்படுவதும் (எ. க) ''இரு இணைப்பு மொழிகளுக்குப் பரிந்து பேசுவது என்பது சுவரில் பூனை செல்ல பெரிய துளை இருக்கும் பொழுது, அதன் குட்டி செல்லச் சிறிய துளையிடுவது போன்றுள்ளது பூனைக்குப் பொருந்துவது குட்டிக்கும் பொருந்தும்'' அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள் பக்கம் 39 — 40.

2 உருவகம்: உவமையின் பணியை இது செய்வதும் கவனத்தை ஈர்க்கப்பயன் படுத்தப்படுவது. ''தமிழ் உமது முரசமாகட்டும். பண்பாடு உமது கவசமாகட்டும்.'' அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள். பக்கம் 21

3 மேற்கோள்: நூல்களிலிருந்தும் அறிஞர் பெருமக்களிடமிருந்தும் மேற்கோள் காட்டுவது அண்ணா இயல்பு. தன் சான்றுகட்கு வலிவு சேர்க்க, அண்ணா மேற்கோளைப் பயன்படுத்துகிறார்.

நூல்: ஒன்றே குலம் ஒருவனே தேவன் யாதும் உரே யாவரும் கேளிர்

அறிஞர்: வாய்ப்பு என்னும் மக்களாட்சியிலிருந்து எழும் அருஞ்சொல் என்னும் முடியாட்சினை நாம் கனவு காண வேண்டும். அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள். பக்கம் 30

4. வஞ்சப்புகழ்ச்சி: இது தவிர, எள்ளி நகையாடலும் குத்தலாகப் பேசுதலும் பயன்படுத்தப்படுகிறன, தன் வாதத்தை நிலை நாட்டலாம் எதிரியின் வாதத்தைத் தவிடுபொடியாக்கலாம் இது பயன்

படுகிறது. ''கிராமியப் பொருளசதாரத்தோடு நம் அமைதியடைய வில்லை; டிராமபோக்களையும் எண்ணூர்களையும் விரும்புகிறோம். அவை அயல்நாட்டவை என்பதை நாம் அறிந்தோம் இல்லை, மொழி பற்றிய விவகாரத்தில் மட்டும் அளவுக்கு மீறிய தேசியவாதிகளாக நாம் நம்மைக் காட்டிக் கொள்கிறோம். ஆங்கிலத்தினை அயல்மொழி என்கிறோம்'' அ. ப. உ. பக்கம் 40.

5 கற்பனைக்காட்சி: அவையோர் கவனத்தைஈர்க்க இது பெரிதும் பயன் படுத்தப்படுகிறது ''மனக்கண்ணால் காணுகிறேன். முது பெரும் புலவர்கள் அவை நோக்கி; முத்துறுகல் தொலைவினின் றும் மூதறிஞர்; காணீர் தமிழ் நெறியை - தரணியார் மெச்சி உற்றிடத் தக்கதோர் நன்நெறியை ஈரடியில் யான் இயற்றியுள்ளசீரடியை என், றுறைத்த வண்ணம் திருவள்ளுவனார் வந்திடும் காட்சியினை''. அ: ப: உ. பக்கம் 4.

6. இரக்கச் சுவை: அவையோர் நாட்டத்தை ஒரு நிலைப் படுத்துவதும் ''ஆட்சி இழந்தபின், பாரியின் பெண்டிர் இருவர் மலை யொன்றில் வாழ்ந்தனர். ஔவையார் அவர்களைக் காணச் சென்ற போது, அவருக்குக் கொடுக்க அவர்களிடம் புதுச்சேலைகள் இல்லை. தாங்கள் அணிந்த நீலச் சிற்றாடையை ஔவையாருக்கு வழங்கினர். நீங்கள் அணிந்துள்ள நன்கொடை அந்த நீலச் சிற்றாடைக்கு ஒப்பான தாகும்'' அண்ணாவின் தலைமை உரைகள்; பக்கம் 54.

7 அடுக்குமொழி- அடுக்குமொழி அண்ணா எனறு கூறுவது வழக்காகும் நடைநுட்பத்திறகாகப் பயன் படுத்தப்படுவது')தம் கட்சி வேலை செய்ய வேண்டிய இடம் திமுக தலைமை நிலையங்களன அறி வகம், அன்பகம் ஆகும் சர்க்கார் அலுவகம் அறிவகமல்ல, அன்பகமும் அல்ல அது அறிவு அகமாகவும் அன்பு அகமாகவும் இருக்கலாம்.'' அ'த.உ. பக்கம் 10,

8, கவின்கதை: இயைபுப்படுத்திக் கருத்யை புரியவைக்கவும் ஆற்றொழுக்கை உண்டாக்கவும் பயன்படுவதும். பொது மக்களிடம் பேசும் பொழுது இதை அண்ணா அதிகம் பயன்படுத்துவார்'

ஒரு சமயம் ஒருவன் பிரான்சு நாட்டுக்குக் கத்திச்சண்டை கற்றுக் கொள்ளச் சென்றான். அவனுக்குப் பயிற்சியளித்தவன் சொன்னான்: ''கத்தியை நீ இறுகப் பிடித்தால் கத்திவிச்சு இலாவ கத்தை நீ அடைய முடியாது. அதே சமயம் கத்திக்கட்டுப்பாடு இல்லை என்றாலும் கத்தி பறவை போல் பறந்து விடும்''.

கத்தியைக் கையாளும் கத்திக்கட்டுப்பாடும் கைகோரத்துச் செல்வதால், கையாளுதலே கட்டுப்பாட்டை விடச் சிறப்பது. அதாவது திட்டமிடுவதை விட திட்டமிட்டதை நிறைவேற்றுவதே மிக இன்றிய மையாதது என்பதை அண்ணா அவர்கள் தம் சட்டமன்ற உரை ஒன்றில் கூறுகின்றார்.

9 சொல் வளம்: கன்னிமராவைக் கரைத்துக் குடித்தவர் அண்ணா என்று சொல்வார்கள், அவ்வளவு ஆழமாகப் படித்தவர் அவர். அவர் சொல்வளம் தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்றதும் அதனால், அது அவர் நடைக்குமெருகேற்றியது. அவர்தம் ஆழமான படிப்பே சொல்வளத்தைப் பெருக்கியது கடைசிவரை படித்துக் கொண்டிருந்தவர் அண்ணா, அமெரிக்கவில் தம் அறுவை வகைக்கு முன் கூட அண்ணா படித்துக் கொண்டுதான் இருந்தார்.

10. சொல்வன்மை: இது அண்ணா நடையில் மணிமுடி. பேச்சுக்கலையில் நேர்த்தியான முறையில் சொற்களைக் கையாளும் முறை அல்லது பெய்யும் முறை இது. பிறவிப் பேச்சாளரான அண்ணாவுக்கு இது கைவந்த கலை.
அண்ணா அவர்கள்

1 சொற்களை வேட மொழிகின்றார்.

2 சொற்களைத் திறனறிந்து சொல்கின்றார்.

3 வெல்லும் சொற்களை வீசி எறிகின்றார்.

4 அவையை ஆராயும் தம் அறிவாண்மையால் அஞ்சாமல் சொல்கின்றார், அவ்வளவு பேச்சாற்றல் வாய்ந்தது அவர் தம் சொல்வன்மை.

''பட்டம் பெற்றிடுகின்றீர் ! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர். பல்கலையில் ஈன்றெடுத்த நன்மணிகள் ஆகின்றீர். ஆம்! ஆயின், இது முடிவா தொடக்கமா? அஃமத கேள்வி'' அ. ப, உ. பக்கம் 6.

11 நகைச்சுவையும் நயமொழியும்: இவ்விரண்டும் இணைந்தே செல்பவை, இயல்பானவை, அறிவுக் கூர்மையானவை. வகையில் வேறுபட்டவை.

ஒரு வீட்டில் துக்க நிகழ்ச்சி, பெண்கள் அழுதுகொண்டிருக்கின்றனர், அவர்களில் ஒருவர் பந்தலிலே பாவக்கா பாவக்கா என்று கூற, அதைப்பார்த்த வீட்டுக்குரிய பெண் மறுமொழியாக அது விதைக் கல்லவோ வச்சிருக்கு விதைக்கல்லவோ வச்சிருக்கு என்று கூறுவதாக அண்ணாதம் பொது உரை ஒன்றில் கூறுகின்றார்,

''மக்களாட்சி நாட்டில் ஒரு கட்சித் தலைவரை இன்னொரு கட்சித்தலைவர் பாராட்டுவார் அவருடைய படத்தைத் திறந்து வைப்பார் ஆனால், சர்வாதிகார நாட்டில் ஒரு தலைவரின் சமாதியை இன்னொரு தலைவர் கட்டி முடிப்பார்.'' அ. த. உ. பக்கம் 50.

இடத்திற்குத் தகுந்தவாறு நகைச்சுவையை அண்ணா பயன்படுத்தும் பாங்கு போற்றுவதற்குரியது.

12 நடைவேறுபாடு: அண்ணாவின் பேச்சுகள் எல்லாம் ஒரே நடையைக் கொண்டவை அல்ல பேச்சு வகைக்குத் தகுந்தவாறு அதுமாறுபடுவது.

சட்டமன்ற நாடளுமன்றப் பேச்சுகளில் கருத்து வீச்சை மேம்படுத்த அது விழா நடை. பட்டமளிப்பு விழா உரைகளில் உயரிய கருத்துக்களைத் தெரிவிக்கும் விழுமிய நடை அது. பாராட்டுரைகளில் சில இனிய இயல்புகளை எடுத்தியம்புவதால், அது விளக்க நடை.

வானொலி உரைகளில் உளநெகிழ்ச்சியை உண்டாக்குவதால், அது உணவுபிழப்புநடை; துவக்க உரைகளிலும் சில செய்திகளைப் படம் பிடிப்பதால், அது படப்பிடிப்பு நடை.

பொது உரைகளில் பலவகைப்பட்ட கருத்துகளைத் தெரிவிப்பதால், அது பல் வண்ண நடை.

பலவகைக் கருத்துகளைப் பல கோணங்களில் விளக்குவதால், அண்ணவின் நடையைக் கருத்து வளநடை அல்லது பெருமித நடை எனலாம்.

சுருங்கக்கூறின், பழுத்த அறிவு, கூறிய அறிவு நுட்பம், அகன்ற காட்சியறிவு ஆகியவை அவர்தம் நடையினை அணிசெய்கின்றன. அதில் அவர்தம் ஆளுமையும் முனைப்பாகப் புலப்படுகிறது. கருத்து முதன்மையும் முழுமையும் கருதாது வெளிப்பட்டு விழுப்படும் அவர்தம் நடையின் தலை சிறந்த பண்புகள் எனலாம். சுருக்கம், தெளிவு, இனிமை, ஓசைநயம், அறிவாழம் முதலியவை அவர்தம் நடையின் ஏனைய பண்புகள். அவர்தம் நடை ஒரு தனி சீறும் தன்யாண்மையும் கொண்டது எனலாம்.

அஃதே அண்ணாவின் நடை இன்றும் பலரும் பின்பற்றும் நடை.

மொழிச் செம்மை: அண்ணாவின் நடையில் தூயதமிழ் எந்த அளவுக்குப் பயன் படுகிறது என்னும் வினா எழலாம். பேச்சுத்தமிழில் மொழி தூய்மைக்கு இடமில்லை. கருத்துத் தெளிவும் ஒட்டமுமே கருதப்பட வேண்டியவை. அவ்வகையில் அண்ணா தூயத்தமிழையே அதிக அளவுக்குப் பயன்படுத்துகிறார் மிகக் குறைந்த அளவே வடமொழி முதலிய பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகிறார். அவர்தம் நடையில் தமிழ் முனைப்பாகவே உள்ளது. அவர் நல்ல தமிழையே பயன்படுத்துகிற.

அடுத்த இதழ் அண்ணாவின் மொழிகளும் கருத்துகளும்.



JL
3N92ICN
N93.1-B
217213

# திரட்டு

## தமிழனுக்கு பெருமை சேர்த்த தமிழ் மகள் அமுதா

திருவல்லிக்கேணியில் மீனவர் குப்பத்தில் பிறந்து சீனாவில் நடந்த இளையோர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் ஆசியாவி யிலேயே முதலாவதாக தங்கப்பதக்கம் வென்று வந்த 17 வயது பெண் ணான அமுதா சென்னை வெலிங்டன் சீமாட்டி மகளிர் மேநிலைப் பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பில் படிப்பவர் அவள் வறுமையான குடும்பத்தைச் சார்ந்தவள். அவள் தந்தை நீச்சல் குளத்தில் மும்பது ரூபாயை நாள் கூலியாகப் பெறுபவர். தாய் மெரீனா கடற்கரையில் கரும்புசாறு விற்பவர்.

அமுதா வென்றிருப்பது 'டிரையத்லரன்' என்கிற போட்டியில் தங்கப்பதக்கம். அந்தப் போட்டியில் 1.5 கிலோமீட்டர் தூரம் நீச்சல், தொடர்ந்து சைக்கிளில் ஏறி 40 கிலோ மீட்டர் செல்லுதல் அதைத் தொடர்ந்து தரையில் 10 கிலோ மீட்டர் ஒட வேண்டும் இந்தப்போட்டி யில் சீனாவில் தங்கப் பதக்கத்தை வென்று தமிழ்நாட்டிற்கு பெருமை தேடிதந்திருக்கிறார் தமிழ் உணர்வுமிக்க சீமாட்டி வெலிங்டன் பள்ளி யின் தலைமையாசிரியை செல்வி. சரோஜா அவர்கள் அமுதாவின் மேல் படிப்புக்காக நிதிதிரட்டுகிறார். தமிழ் நெஞ்சங்கள் அமுதாவுக்கு நிதியுதவி செய்திட வேண்டும் என்பது எங்கள் வேண்டுகோள்.

நிதியனுப்ப வேண்டிய முகவரி

சி. அமுதா,
பன்னிரெண்டாம் வகுப்பு,
வணிகவியல் பிரிவு,
வில்லிங்டன் சீமாட்டி மேநிலைப்பள்ளி
திருவல்லிக்கேணி சென்னை - 600 005.
S. B. Account No. 3210. Indian Oveaseas Bank
T.N.S.C B Ext. counter Triplicane.

## தமிழனுக்கு பெருமை சேர்த்த தமிழன் இசை ஞானி இளையராசா

உலகப் புகழ் பெற்ற லண்டன் 'ராயல்யில்ஹால் மோனிக்' இசைக்குழுவினரின் அழைப்பை ஏற்று அக்குழுவினர் வியந்து போற் றும் வகையில் குறுகிய நாட்களில் 'சிம்பொனி' இசைவடிவம் அமைத்

நன்கொடை ரு. 3-00 பதிவு எண்: 66/TN/MS(C)1239

காஞ்சி

# நாடு

துக் கொடுத்து உலகப் புகழ் பெற்றுள்ள தமிழனாக இளையராஜா உயர்ந்துள்ளர்.

இந்தியாவிலேயே மட்டுமல்ல ஆசியாவிலேயே இந்தச் சாதனையை நிகழ்த்திக்காட்டி 'மாஸ்ட்ரோ' என்ற பட்டத்தைபெற்ற முதல் மனிதர் இவர்தான்' அவருக்கு கிடைத்தபெருமைதமிழர்களுக்குகிடைத்த பெருமை. அவரை நாமும் நெஞ்சாரப் பாராட்டுகிறோம். நாமக்கல் கவிஞரின் கவிதை வரிகளை உண்மையாக்கி உலகத்திற்கு எடுத்துக் காட்டிய இசைஞானி இளையராஜ அவர்களை நமது பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையும் பாராட்டி வாழ்த்தி மகிழ்கிறது.



ஆசிரியர் ,வெளியிடுபவர் : மலர்வண்ணன் அண்ணாதுரை
7, அவின்யூ சாலை, சென்னை-34.
அச்சிடுபவர். C .R. கண்ணன் அண்ணன் அச்சகம் சென்னை

பெறுநர் :
திரு. / திருமதி
Director
Tamil Nadu Archives
Madras 8

விடுநர் :
பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7. அவின்யு சாலை,
சென்னை-600 034.
பேசி: 8278570